# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,938/4 — 1970 දෙසැම්බර් 28 වැනි සඳුද — 1970.12.28

14,938/4 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினுல் திருத்தப் பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் பிரிவு 5 சி யினது துணைப்பிரிவு (1) இன் கீழ் கட்டளை**

1963 ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் பிரிவு 5 பி யினது துணைப்பிரிவு (1) இன் நியதிகட்கு அமைவாக, 1964 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாந் தேதி தொடக்கம், பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய், உலை எண்ணெய் ஆகிய இவற்றை இறக்குமதி செய்யும், ஏற்றுமதி செய்யும், விற்கும், வழங்கும் அல்லது பங்கிடும் உருத்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் திற்குப் புறநீங்கலாக உரிமையளிக்கப்பட்டிருப்பதினுலும்

முற்கூறிய 5 பி யினது துணைப்பிரிவு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள எவ்வகையையும் விவரணத்தையும் உடைய பெற்றோலியம் என்றல்லாமல், எவ்வகையையும், விவரணத்தையும் உடைய பெற்றோலியத்தை இறக்குமதிசெய்யும், ஏற்றுமதிசெய்யும், விற்கும், வழங்கும் அல்லது பங்கிடும் உருத்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு புறநீங்கலாக உரிமையளித்துக் கொள்வதற்குச் சொல்லப்பட்ட அதிகாரச் சட்டத்தின் பிரிவு 5 சி யினது துணைப் பிரிவு 1 இன் பிரகாரம் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சருக்கு அதிகாரமளிக்கப்பட்டதினுலும்

1961 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாந் தேதியில் இருந்து விமான உராய்வு நீக்கும் எண்ணெய்களும் கொழுப்புகளும் தவிர்ந்த எல்லா உராய்வு நீக்கும் எண்ணெய்களையும் கொழுப்புக்களையும் இறக்குமதிசெய்யும், ஏற்றுமதிசெய்யும், விற்கும், வழங்கும் அல்லது பங்கிடும் உருத்து இக்கூட்டுத்தாபனத்திற்கு புறநீங்கலாக உடையதென கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திக்கிரி பண்டா சுபசிங்கா ஆகிய நான் இத்தால் வெளிப்படுத்திக் கட்டளையிடுகின்றேன்.

திக்கிரி பண்டா சுபசிங்கா,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
1970 ம் ௵ டிசம்பர் ௴ 28 ந் ௳.
(எல் எ./எ/105).

12–1353/1

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**உரிமைக் கட்டளை**

**1963** ஆம் ஆண்டினது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன (திருத்தம்) 5 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கைப்பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 35 ஆம் பிரிவினுல் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் கைத் தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திக்கிரி பண்டா சுபசிங்கா ஆகிய நான்—

(அ) இவ்வகைக்கு இப்பட்டோலையின் விடயம் ஒன்றில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தில் உள்ள ஊர்திச்சாலையில் நிற்பாட்டி வைக்கப் பட்டிருப்பதும் டிராக்ரருக்கும் (மெக் பி 42) டிரெயிலருக்கும் (கொள்திறன் 2400 இ.க.) முறையே சிவி 6740 ரி. ஆர். 1351 ஆகிய பதிவெண்களைக்கொண்டுள்ளனவும் ஆகிய தொடுத்தவிமான மீள எரிபொருளூட்டி தவிர்த்து இவ்வகைக்கு இப்பட்டோலையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம் விடயங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் ஒவ்வொன்றிலும் காணக் கிடக்கும் அல்லது அதில் கொண்டிருக்கும் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமாகிய சொத்தும்,

(ஆ) இவ்வகைக்கு இப்பட்டோலையின் விடயங்கள் 1, 2, 3, 4, 5, 6 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்துக்களில் 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதியன்றிருந்தபடி ஒழுங்கு (ஒப்பாசாரமுள்ள அல்லது ஒப்பாசாரமற்ற) உடன்பாடு குத்தகைமுறி நொத்தாரி சாற்கைச்சாத்திடப்பட்ட சாதனம் போன்ற எவற்றினுவது நியதிகளின் கீழ் அடையப் பெற்ற தனித்தனியானதும் அடங்கலானதுமான சகல உரிமைகள் அக்கறைகள் நயங்கள் (ஷெல்லும் எஸ்ஸோவும்–கொலன்னுவா, புளூமென்டல், மற்றும் தெற்கு துறைமேடை),

(இ) புளூமென்டலில் உள்ள பொதுவசதி எண்ணெய் குழாய் இணைப்பில் உள்ள "வால்வ்பெட்டி" யில் இருந்து இவ்வகைக்கு இப்பட் டோலையில் விடயம் 5 இல் விவரிக்கப்பட்டிருக்கும் சொத்தின் கிழக்கு வெளிப்புற எல்லைவரை முற்றுகவுள்ள எல்லா குழாய் இணைப்புக்கள் அதில் கொண்டிருக்கும் பெற்றோலியப் பொருட்கள் வால்வுகள் " வால்வ்பிர்ஸ் ", " பெண்ட்ஸ் ",

